**ஒதுக்கீட்டுத் தலைப்பு 255 - மாவட்ட செயலகம், கொழும்பு**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை – 2012 ஆம் ஆண்டு**

**1. மாவட்ட செயலகத்தின் பிரதான பணிகள்**

(அ) வறுமையை குறைப்பதற்காக செயற்படுத்தல்.

(ஆ) தேர்தல்களை ஒருங்கிணைத்தல்.

(இ) அபிவிருத்திச் செயற்திட்டங்களை திட்டமிடலும், மேற்பார்வை செய்தலும்.

(ஈ) அனர்த்த நிவாரண செயற்திட்டங்களையும் புனர்நிர்மாண செயற்திட்டங்களையும் நிர்வகித்தல்.

(உ) மாவட்ட செயற்திட்டங்களின் நிர்வாகம், வழிகாட்டல் மற்றும் வருமானங்களை சேகரித்தல்.

**1.2. மாவட்ட செயலகத்தின் கீழ் உள்ள பிரதேச செயலகங்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (அ). | சீதாவக்க | (உ). | மொறட்டுவை | (ஐ). | ஸ்ரீ ஜயவர்தனபுர |
| (ஆ). | பாதுக்க | (ஊ). | தெஹிவளை | (ஒ). | கெஸ்பேவ |
| (இ). | இரத்மலானை | (எ). | கடுவெல | (ஓ). | ஹோமகம |
| (ஈ). | மஹரகம | (ஏ). | கொழும்பு | (ஔ). | கோலொன்னாவ |
| | | | | (க). | திம்பிரிகஸ்யாய |

**1.3 கணக்காய்வின் நோக்கெல்லை**

கொழும்பு மாவட்ட செயலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 நவம்பர் 18 ஆம் திகதி மாவட்டச் செயலாளரிற்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின்

அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

## 1.4 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு உரியவகையிலான உள்ளகக்கட்டுப்பாட்டின் திட்டமிடுதல், செயற்படுத்தல் மற்றும் பேணிச்செல்லல் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 1.5 கணக்காய்வு அவதானிப்புகள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், கொழும்பு மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு இதன் (அ) முதல் (ஈ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.6 முதல் 1.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் என்பவற்றை தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்பட்டிராமை

2012 திசெம்பர் 31 வரை மாவட்டச் செயலகத்தில் காணாமற்போன 145 உறுதிச்சீட்டுக்களின் பெறுமதி ரூபா 5,040,360 ஆகக் காணப்பட்டதுடன் அச் செயலகத்தில் 2012 நவம்பர் 26 ஆம் திகதி ஏற்பட்ட திடீர் தீ விபத்தின் காரணமாக உரிய ஏனைய சான்றுகளும்

அழிவுற்றிருந்தமையால் இது தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(i) மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

மீளாய்வாண்டிற்காக மாவட்ட செயலகத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 764,042,714 ஆனதுடன் ஆண்டின் இறுதியில் இதில் ரூபா 686,363,290 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தேறிய சேமிப்பு ரூபா 77,679,424 ஆனதுடன் இது மொத்த தேறிய ஏற்பாட்டின் 10 சதவீதமாகக் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| செலவினம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மதிப்பீட்டு ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேறிய ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேமிப்பு | சேமிப்பு தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டுவருபவை | 444,550,000 | 549,042,714 | 8,927,047 | 2 |
| மூலதனம் | 215,000,000 | 215,000,000 | 68,752,377 | 32 |
| மொத்தம் | 659,550,000 | 764,042,714 | 77,679,424 | |

**(ii) பாதீட்டு முரண்கள்**

05 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்பு அச் செலவின விடயங்களுக்கு உரித்தான தேறிய ஏற்பாட்டின் 11 சதவீதத்திற்கும் 45 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சைக் கொண்டிருந்தது.

**(iii) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட ஏற்பாடுகளின் பயன்பாடு**

பல்வேறு செயற்பாடுகளுக்காக 18 அமைச்சுக்களிலிருந்தும் 09 திணைக்களங்களிலிருந்தும் முறையே ரூபா 2,702,793,214 தொகையும் ரூபா 3,248,048,200 தொகையுமாக ரூபா 5,950,841,414

ஆன ஏற்பாடு மாவட்டச் செயலகத்திற்குக் கிடைக்கப்பெற்றிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரை இதில் முறையே ரூபா 2,552,131,310 தொகையும் ரூபா 3,102,391,960 தொகையுமாக ரூபா 5,654,523,270 கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ரூபா 296,318,144 தொகை அதாவது பெறப்பட்டிருந்த ஏற்பாட்டில் 4.97 சதவீத சேமிப்பு கண்டறியப்பட்டது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் திவிநெகும கால்நடை வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கோழிக் குஞ்சுகள் பகிர்ந்தளிப்புச் செயற்திட்டத்திற்காக ரூபா 10,000,000 தொகையான ஏற்பாடு பெறப்பட்டிருந்ததுடன் இதற்காக இதில் ரூபா 6,128,500 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. கோழிக் குஞ்சு பகிர்ந்தளிப்பு செயற்திட்டத்தை அமுலாக்குகையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக சகல நலன்பெறுனர்களும் கலந்துகொள்ளாமை, கோழிக் குஞ்சுகளை வளர்க்கும் வசதிகள் தொடர்பாக பரிசோதிக்காமை, கோழிக் குஞ்சு பகிர்ந்தளிப்பின் போது ஆண் மற்றும் பெண் பிராணிகள் முறையான விகிதாசார முறைக்கு நலனாளிகளுக்காக வழங்கப்படுவதற்கு செயற்படாமை, பகிர்ந்தளிப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட கோழிக்குஞ்சு வகையின் படி எதிர்வரும் காலத்தில் குஞ்சுகளை இனப்பெருக்கும் செய்யும் இயலுமை அவ் வகைப் பிராணிகளில் இன்மை மற்றும் செயற்திட்டத்தின் பின்தொடர் நடவடிக்கை முறைப்படி திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதற்கு உத்தியோகத்தர்களின் முறையான பங்களிப்பு என்பன கிடைத்திருக்கவில்லை.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான் முற்பணக் கணக்கு**

**பாரளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

25501 விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான மீதிகள் பின்வருமாறாகும்.

| செலவு | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 47,000,000 | 35,901,178 | 34,000,000 | 36,421,071 | 186,000,000 | 165,487,614 |

### (ஈ) பொது வைப்புக் கணக்கு

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் பொது வைப்புக் கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 522,953,937 ஆக இருந்ததுடன் அது தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| கணக்கு இல. | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா |
| 6003/0000/00/0001/0000/000 | (20,795) |
| 6003/0000/00/0031/0000/000 | 518,492,289 |
| 6003/0000/00/0001/0000/004 | (4,482,442) |
| 6003/0000/00/0001/0004/000 | 8,964,885 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

திணைக்களப் புத்தகங்களின் படி, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இல. 6003/0000/00/0001/0000/000 பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 20,795 ஆன வரவு மீதியானதுடன் திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 14,503,238 ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம், திறைசேரி மற்றும் திணைக்களப் புத்தகங்களிற்கு இடையில் ரூபா 14,482,442 தொகையான வேறுபாடு நிலவியமை அவதானிக்கப்பட்டது. 6003/0000/00/0001/0000/004 ஆம் இலக்க மற்றும் 6003/0000/00/0001/0004/000 ஆம் இலக்க இரண்டு வைப்புக் கணக்குகளும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்பாடற்றுக் காணப்பட்ட போதிலும் இக் கணக்குகளில் நிலவிய ரூபா 4,482,442 தேறிய கூட்டுத்தொகையான செலவு மீதியைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 1.6.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுச் செயலாளர்கள், மாகாண சபை தலைமைச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைத் தலைவர்களுக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆம் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து

எதிர்வரும் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளுக்காக கூட்டிணைந்த திட்டம் ஒன்று மாவட்டச் செயலகத்தினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் திட்டம் 2012 திசெம்பர் 31 வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை

### 1.6.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேலே 1.6.1 இல் குறிப்பிடப்பட்ட அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தெம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் 402 மற்றும் 402(1) இன் பிரகாரம் நிதியாண்டு பூர்த்தியடைந்து 150 நாட்களுக்குள் அமைச்சினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான ஒரு பிரதியுடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2013 யூலை 09 ஆம் திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.3 வருடாந்த கொள்வனவு திட்டம்

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவு திட்டம் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.7 இழப்புகளும் நட்டங்களும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட இழப்புகள் மற்றும் நட்டங்கள் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒதுக்கீட்டுக் கணக்கின் குறிப்பின் கீழான நட்டம் தொடர்பான கூற்றில் காணப்படும் 05 ஆண்டிற்குக் குறைவான 05 இற்கும் 10 வருட காலத்திற்கும் இடைப்பட்ட காலமாக நிலவிவரும் முறையே ரூபா 468,718 தொகையானதும் ரூபா 170,835 தொகையானதுமான நட்டங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 நவம்பர் 26 ஆம் திகதி கொழும்பு மாவட்ட செயலகம் தீப்பற்றியதன் காரணமாக கட்டிடத்திற்கு ஏற்பட்ட சேதம் ரூபா 76,000,000 என மதிப்பீட்டுத் திணைக்களத்தால்

மதிப்பிடப்பட்டிருந்ததுடன் நி.பி.104(4) இன் பிரகாரம் நியமிக்கப்பட்ட ஆய்வுச் சபை அறிக்கையின் பிரகாரம் பதிவுப் பொருட்களுக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 16,606,688 என அறிக்கையிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், மொத்த நட்டத்தொகை ரூபா 92,606,688 தொடர்பில் நி.பி. 104(4) இன் பிரகாரம், முழுமையான அறிக்கை 2013 ஒக்டோபர் 30 வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.8 மனித வள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிககை |
|---|---|---|---|---|---|
| (i). | சிரேஷ்ட நிலை | 63 | 63 | 02 | 02 |
| (ii). | மூன்றாம் நிலை | 24 | 18 | 06 | -- |
| (iii). | இரண்டாம் நிலை | 1105 | 883 | 228 | 06 |
| (iv). | ஆரம்ப நிலை | 133 | 121 | 12 | -- |
| | மொத்தம் | 1325 | 1085 | 248 | 08 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 248 வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஆட்சேர்க்கப்பட்டிருந்த மிகையான ஊழியர் எண்ணிக்கை தொடர்பாக முறையான அங்கீகாரம் பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.